DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 217/2019

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கல்யாணசுந்தரம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 13.02.2025 at 02.10 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நகல் வாசிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2014ம் ஆண்டு இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் மற்றும் வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். அதுசமயம் கடந்த 24.08.2014ம் தேதி சுமார் 05.00 மணியளவில் இராமநாதபுரம் சார்பு நீதிமன்ற நீதிபதிக்கு சொந்தமான TN 69 AU 8894 என்ற பதிவெண் கொண்ட Maruthi Swift Dzire காரில் சார்பு நீதிபதி திரு.சந்திரன் மற்றும் அவரது குடும்பத்தாருடன் அவரது சொந்த ஊரான நாகர்கோவிலுக்கு இராமநாதபுரம் to சாயல்குடி செல்லும் ரோட்டில் சென்று கொண்டிருந்தோம். வாகனத்தை நான் ஓட்டி வந்தேன்.

3. அப்போது மலட்டாறு விலக்கு ரோட்டில் வாகனத்தை இடது புறமாக ஓட்டிச் சென்றபோது கடலாடி ரோட்டிலிருந்து வந்த லோடு ஆட்டோ வண்டி சாயல்குடியை நோக்கி திரும்பியபோது நான் ஓட்டி வந்த வாகனத்தின் முன்புற வலது பக்கம் இடித்து விட்டது. மேலும் வாகனத்தை நிறுத்தாமல் சென்றுவிட்டார். நான் அவர் வாகனத்தின் பின்புறமாக

சென்று முந்திச் சென்று நிறுத்தினேன்.

4. ஏன் வாகனத்தை இடித்துவிட்டு நிற்காமல் வந்தாய் என்று வண்டியின் ஓட்டுநரிடம் கேட்டபோது என்னை அசிங்கமாக பேசி கையால் அடிக்க ஓங்கினார். என்ன வார்த்தை பேசினார் என்று தற்போது ஞாபகம் இல்லை. சம்பவத்தை பார்த்து அந்த வழியாக வந்த நெடுஞ்சாலை ரோந்து வாகனம் வந்து போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரித்தபோது அந்த நபர் ஓடிவிட்டார். வாகனத்தை போலீசார் காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்றார்கள்.

5. வாகனத்தை ஓட்டி வந்து மோதிய நபர் யார் என்று எனக்கு தெரியவில்லை. வாகனம் மோதியதில் காரின் முன்பகுதி சேதமடைந்தது. மோதிய வாகனத்தின் பதிவெண் TN 02 Q 3211 ஆகும்.

6. பின்னர் 05.30 மணியளவில் சாயல்குடி காவல் நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –**</u>

1. இவ்வழக்கின் புகாரை நான் 28.08.2014ம் தேதியன்று புகார் அளித்தேன். சம்பவம் நடைபெற்ற நாள் 24.08.2014 ஆகும். சாட்சி தற்போது சம்பவம் நடந்த அன்றே புகார் அளித்ததாக தெரிவிக்கிறார்.

2. எதிரி என்ன வார்த்தை திட்டினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அடிக்க வந்த விபரத்தையும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி வந்த வாகனத்தில் எந்த நீதிபதி இருந்தார் என்ற விபரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. 2 வாகனங்களின் நிறத்தையும் புகாரில் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். புகாரில் எதிரியின் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நெடுஞ்சாலைத்துறை ரோந்து வாகனம் சம்பவம் நடந்த 5 நிமிடத்தில் சம்பவ இடம் வந்து விட்டது.

4. சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் யாரையும் சம்பவ சாட்சியாக குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை. எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தை விரட்டிச் சென்று பிடித்த பின்பும் அவரது பெயர் விலாசம் தெரிந்துகொள்ளவில்லை.

5. சம்பவம் நடந்தவுடன் சாயல்குடி காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தில் பயணித்த யாரையும் சாட்சியாக குறிப்பிடவில்லை.

6. நான் அளித்த புகாரில் உள்ள தேதிகள் இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேறு எங்கோ மோதி வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)